Regd. M. No. 4565

தமிழ் மருத்துவப் பொழில்

(TAMIL SIDDHA MEDICAL MAGAZINE)

திங்கள் வெளியீடு.

மலர் 3 | ஜூன் 1943 | இதழ் 6.

ஆசிரியர்:

தமிழ்ப் பண்டிதரும், மருத்துவ பண்டிதருமான

மாங்காடு. வடிவேலு முதலியார்.

உரிமையாளர்:

காரியக்கமிட்டியார் : சித்த மாணவர் கழகம்.

கவர்ன்மெண்ட் இந்திய மருத்துவ பாடசாலை

கீழ்ப்பாக்கம், மதராஸ்.

தமிழ்
மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 3 | ஜூன் 1943 | இதழ் 6

ஒப்பு நோக்கு

வெள்ளெழுத்தும் – பிரஸ்பையோப்பியாவும்

வெள்ளெழுத்து

கூசும் விழியும் புகைந் திருந்தும் குறுகும் பார்வை தோற்றது
மாசுங் கண்ணும் பசிந் திருக்கும் மயக்குங் குணங்கள் பலவாகும்
தேசுங் குறையு மருட்சி யுண்டாம் திறமாய் கருமம் செய்யாது
ஏசுங் குணங்கள் வெள்ளெழுத்து என்றே சொல்லு இவை கண்டே

கண்கள் கூசும், பார்வை புகைந்து காட்டும், சமீப பார்வை தெரியாது. கண்கள் பிரகாசமில்லாது மயங்கிப் போயிருக்கும். பார்வையில் மயங்கச் செய்யும். இக்குணங்களிருப்பின் வெள்ளெழுத்தென்று சொல்லப்படும்.

கண் ஒளி குறையும், பொருள்களை நோக்கின் சரிவர தெரியாமல் சந்தேகத்தை உண்டு பண்ணும். இக் காரணங்களினால் படிக்கும் தொழிலை போன்ற தொழில்களை சரிவர செய்ய இயலாது.

(அ. ந. வி.)

PRESBYOPIA

The failure of accommodation becomes evident gradually, and as a rule becomes apparent first in reading. Small print becomes indistinct, and in order to get with in the limits of his receding near point, the patient tends to hold his head back and his book well forwards, until a distance is reached when clear vision under any circumstances is difficult. Complaint is usually made of visual failure rather than visual fatigue. The printed page becomes indistinct and letters and words are confounded. Sooner or later, however symptoms of eye-strain appear. Headaches are complained of, and the eyes feel tired and ache, and tend to assume the chronically suffused appearance so frequently seen in middle aged adults.

"The Practice of Refraction"

நாடி

மாங்காடு—வடிவேலு முதலியார்.

வேறு தேரையர் நாடி

வாதராஜன் பித்த ராஜன் வருகின்ற சேத்ம ராஜன்
ஆதியா மூவர் தாமும் அவரவர் வீட்டி னின்று
போதவே யுறவ தாகிப் பொருந்தியே யிருப்பா ராயின்
சேதமு மில்லை நோயும் செடமதி னுடி டாதே

(க-ரை) இச்செய்யுள் இவ்வுடலாகிய பூமியை அரசாள்வோர் மூவர் என்றும் அவர்கள் ஏற்றத் தாழ்வான வன்மையுள்ளவர்கள் என்றும், அவர்கள் தங்கள் தங்களுக்குள்ள இட அளவில் மீறுமல் ஒருவர்க் கொருவர் நட்பாயிருந்தால் அவ்வுடலாகிய தங்கள் நாட்டுக்கு யாதொரு அழிவும் துன்பமு முண்டாக மாட்டாதென்றும் கூறுகின்றது.

(சொ-ரை) வாதராஜன் பித்தராஜன் வருகின்ற சேத்மராஜன் ஆதிஆம் மூவரும்-வாதம் பித்தம், ஐயம் ஆகிய பிணிகள் மூன்றும், அவரவர் வீட்டில் நின்று-அதனதன் இடத்தில் இருந்து கொண்டு, போத உறவு ஆகிபொருந்தி இருப்பார் ஆயின்-மிக்க உறவாய்க் கலந்திருப்பார்களானுல், சேதம் இல்லை-உடலுக்கு அழிவு உண்டாக மாட்டாது, செடத்தில் நோயும் நாடிடாது-உடம்பில் யாதொரு நோயுஞ் சேராது.

(பொ-ரை) வாதம் முதலான முப்பிணிகளும் தத்தமக்கென ஏற்பட்டுள்ள இடங்களிலிருந்து உறவு பூண்டால் உடலில் நோயும், அதற்கு அழிவும் உண்டகாது.

வளி முதலிய மூன்றன் ஆட்சியே உடலில் நடக்கின்றமையின், அவற்றை ராஜன் எனக் கூறினர். இதை,

"நீங்கருந்துயர் செய்வளி முதல் மூன்றன் நிலையுளோன்" எனச் சிவப்பிரகாச சுவாமிகள் சோணசைல மாலையிற் புகன்றுள்ளதாலறிக.

இம் மூன்றன் இடங்களாவன: வாதத்திற்கு மலாசயமும், பித்தத்திற்கு சலாசயமும், ஐயத்திற்குச் சுக்கிலாசயமும் இடங்களாம். இதை,

"அறிந்திடும் வாத மடங்கு மலத்தினில்
பிரிந்திடும் பித்தம் பேராஞ் சலத்தினில்
மறிந்திடு மையம் வசிக்கும் விந்துவில்
உறைந்தி டிம்மூன்றுக் குறவாந் தலமிதே"

என்று திருமூலர் புகன்றுள்ளதா லறிக.

இஃதன்றி, யூகிமுனிவர், வாதத்திற்கு நாபிக்குக் கீழிடம் இருப்பிடமென்றும்; பித்தத்திற்குக் கழுத்துக்குக் கீழிடம் இருப்பிடமென்றும்; ஐயத்திற்கு உச்சிக்குக் கீழிடம் இருப்பிடம் என்றுஞ் சொல்லியிருக்கிறார். இதை,

"நாமென்ற வாதத்துக் கிருப்பிடமே கேளாய்
நாபிக்குக் கீழென்று நவிலலாகும்
பேமென்ற பித்தத்துக் கிருப்பிடமே கேளாய்
பேரான கண்டத்தின் கீழ தாகும்
தேமென்ற சேத்மமது சிறந்திருக்குந் தானம்
சேயனே யுச்சிக்குக் கீழதாமே"

என்னுஞ் செய்யுளாலறிக.

உபத்ரவ மொன்றுமில்லை யுடலினில் வியாதி யில்லை
நவமதாய் வாத மிஞ்சில் நாடரி நோய்களுண்டாம்
எவமதாய்ப் பித்த மிஞ்சில் எறிடும் பயித்தி யங்கள்
அவமிகுஞ் சேத்து மந்தான் அது மிஞ்சி னீளையாமே.

(க-ரை) இச் செய்யுள் மூன் செய்யுளின் தொடர்ச்சியையும் அம்மூன்றும் தனித்தனி மிஞ்சினால், அவ்வந் நோய்கள் மிஞ்சுவனவாம் என்பதையுங் கூறுகின்றது.

(சொ-ரை) உபத்ரவம் ஒன்றும் இல்லை-நோயும் அதனால் ஏற்படும் துன்பமுமாகிய இவை கொஞ்சமும் உண்டாகாது; உடலினில் வியாதியில்லை-உடம்பில் எவ்வகையான நோய்களும் உண்டாகா, வாதம்-வளியின் அளவை யுணர்த்துதற்குரிய வாதநாடி, நவம்ஆய்-(உணவு செயல்கள் மாறுவதால்) புதிதாய், மிஞ்சில்-(கூடுமென்று) அதிகப்படுமானால், நாடு-மருத்துவர் யாவரும் நாடி ஆராய்ந்து பார்த்தற்குரிய, அரி நோய்கள்-வாதம் என்னும் வளி நோய்கள், உண்டாம்-ஏற்படுவனவாகும்; எவ்வம்ஆய்-துன்பம் (விளைவிப்பதாய்) பித்தம்-பித்தத்தின் அளவை உணர்த்தற்குரிய பித்தநாடி, மிஞ்சில்-அதிகப்படுமானால், பயித்தியங்கள்-பித்தம் என்னும் அழல் நோய்கள், எறிடும்-உடம்பில் மிகுந்துண்டாகும், அவம் மிகு-(உடலுக்குக் கெடுதி விளைப்பதாகிய) வீணான செயல்களை மிகுகின்ற, சேத்துமம்-ஐயத்தின் அளவை உணர்த்தற்குரிய ஐயநாடி, மிஞ்சில்-அதிகப்படுமானால், ஈளை ஆம்-கோழையின் இயைபுள்ள காசம், சுவாசம், (இளைப்பு நோய் என்னும்) க்ஷயம் என்னும் இந்நோய்கள் உண்டாவனவாம்.

(பொ-ரை) வாதத்தின் அளவை உணர்த்தும் வளிநாடி மிகுந்தால், வளியால் வரக்கூடிய நோய்களும், பித்தத்தின் அளவை யுணர்த்தும் அழல் நாடி மிகுந்தால் அழலால் வரக்கூடிய நோய்களும், சேத்மத்தின் அளவை யுணர்த்தும் ஐயநாடி மிகுந்தால் ஐயத்தால் வரக்கூடிய ஈளையின் இயைபுள்ள நோய்களும் உண்டாவனவாம்.

இம் மூன்றின் மிகுந்த அளவை உணர்தற்கு முன்னரே அவற்றின் இயற்கை அளவுகளை உணர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு உணர்ந்திராவிடின் நோய்களை உணர்த்தும் செயற்கை அளவுகள் தெரியமாட்டா.

அவ்வியற்கை அளவுகளாவன: வாதம் ஒரு மாத்திரையும், பித்தம் அரை மாத்திரையும், ஐயம் கால் மாத்திரையுமா யிருத்தல். இதை,

"வழங்கிய வாத மாத்திரை யொன்றாகித்
தழங்கிய பித்தந் தன்னி லரைவாசி
அழுங்குங் கபந்தா னடங்கியே காலோடில்
பிழங்கிய சிவற்குப் பிசகொன்று மில்லையே"

என்று திருமூலர் நாடி நூல் கூறுவதா லறிதல் வேண்டும்.

வாதராஜன், பித்தராஜன், ஐயராஜன் என்னும் இவர்களின் பகையும், போரும்

அறுசீர் விருத்தம்

"காலங்கள் வரும்போ திற்போர் கடுகியே மூவர் தாமும்
கோலங்கொண் டொன்றோ டொன்று கொடும்பகை யாகியக்கால்
நீலம்பூண் டிருக்கும் ராஜன் நேர்படுங் கோப மாகி
வேலும்பா சங்கைக் கொண்டு வெளிப்பட்டு யுத்தஞ் செய்வான்."

(க-ரை) இச் செய்யுள் வாத, பித்த, ஐயங்களாகிய அரசர்கள், தங்களுக்குள் பகையுண்டாதலையும், போரிடுதலையுங் கூறுகின்றது.

(சொ-ரை) காலங்கள் வரும்போதில்-இவர்கள் அரசு செய்யும் ஊராகிய உடலில், பித்த மென்னும் அரசனும், சுகமாய் அரசாள்வதைப் பார்த்து, ஒன்றோடு ஒன்று-வாத, பித்த, ஐயம் என்னும் மூன்று அரசர்களும் கொடும்பகை ஆகி-மிக்க கொடுமையை விளைவிக்கக் கூடிய பகையுள்ளவர்களாய், அவ்பகைமையைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு, மூவரும்-மேற்படி மூவரும், கடுகி-சினங் கொண்டு இருந்தனர்; அக்கால்-அச்சமயத்தில், போர்கோலம் கொண்டு-சண்டையிடற்கு வேண்டிய வடிவங்கொண்டு, வர, அவர்களில், நீலம்பூண்டு இருக்கும் ராஜன்-கறுத்த நிறத்தையுடைய வாதம் என்னும் அரசன், நேர்படும்-ஏற்பட்ட, கோபம் ஆகி-சினங் கொண்டவனாய், வேலும் பாசம் கை கொண்டு-வேலாயுதத்தையும், கயிற்றையும் எடுத்துக் கொண்டு, வெளிப்பட்டு-மேற் கிளம்பி, யுத்தம் செய்வான்-சண்டை செய்ய ஆயத்தமானான்.

ஈண்டு, வேல் என்பது: குத்தல், குடைதல்; பாசம் என்பது: வலித்தல், இழுத்தல், தள்ளுதல் முதலியன.

—::✿::—

முத்து

Dr. R. தியாகராஜன், L.I.M.

நவமணிகளில் ஒன்றாகியதும், கடல் படுதிரவியங்கள் ஐந்தனுள் ஒன்றுமாகிய முத்து, முரிவஞ்சி, தூலகம், சுக்கிரன், நித்திலம், தாளம், சங்கீன்ற பிள்ளை, ஆதித்தன்சோதி, ஆழிவித்து, கத்தலம், மௌத்திகம் என்ற வேறு பெயர்களினாலும் வழங்கப்படும் எனக் கொள்க.

"தக்க முத்திரண்டு வேறு தலசமே சலச மென்ன" என்பதனால், தரையில் கிடைக்கப்படும் முத்தை "தலசம்" என்றும், சலத்திற் கிடைக்கப்படும் முத்தை "சலசம்" என்றும் வழங்கப்படும் எனக் கொள்க.

முத்தின் பிறப்பு

ஐப்பசித்திங்கள் சுவாதி நட்சத்திரங்கூடிய அத்ததியில் கடலுள்ளிருக்கும் சிப்பிகள் வெளியில் வந்து தன் சிப்பியைத் திறந்திருக்குங் காலத்தில் மின்னலுடன் பெய்யும் மழைத்துளி அச்சிப்பியில் விழ வாய் மூடி உள்ளிறங்கி சூல்கொண்ட முத்துமணியே உயர்வானதென்று விளம்புவர். ஒரு ஆண்டில் இப்பி முத்தீனும். இவ்வரலாற்றை "இருபது முத்தீன்றாலு" என்னும் வெண்காடர் புராணச் செய்யுளாலறிக.

முத்தின் பிறப்பிடம்

முத்தின் பிறப்பிடம் இருபதென்று சிலரும் பதின் மூன்றென்று ஒரு சாராரும் கூறுவர். அவ்விருபதிடமும் வருமாறு,

"பனிமதி கதலி மேகம் பைந்தொடி கழுத்தா வின்பல்
தனியானை யேனக் கொம்பு தடங்கரா வுடும்பு கொக்கு
வினையராச் சலஞ்ச லந்தத் திப்பிமீன் மூங்கில் பூகம்
நினைசெந்நெல் கரும்பு கஞ்சநிகழிரு பதின்முத் தாகும்."

(திருவெண்காடர் புரா.)

"தந்தி வராக மருப்பிப்பி பூகந் தழைகதலி
நந்து சலஞ்சல மீன்தலை கொக்கு நளினமின்னார்
கந்தரஞ் சாலி கழைகன்ன லாவின்பல் கட்செவிகா
சிந்து வுடும்புக ராமுத்த மீனு மிருபதுமே."

(அரதனைச் சருக்கம்.)

இருபது பிறப்பிடம்:—1. மதி 2. மேகம் 3. சங்கு 4. சிப்பி 5. மீன்தலை 6. நந்து 7. முதலை 8. உடும்பு 9. தாமரை 10. வாழை 11. கமுகு 12. கரும்பு 13. செந்நெல் 14. மூங்கில் 15. யானைக் கொம்பு 16. பன்றிக் கொம்பு 17. பசுவின் பல் 18. நாகம் 19. கொக்கு 20. நங்கையர் கழுத்து.

பதின்மூன்றிடம் வருமாறு,

"இக்கதிர் முத்தந் தோன்று மிடன்பதின் மூன்று சங்கம்
மைக்கரு முகில்வேய் பாம்பின் மத்தகம் பன்றிக் கோடு
மிக்கவெண் சாலி யிப்பி மீன்றலை வேழக் கன்னல்."
(திருவிளை புரா.)

"கரிமருப் பைவாய் மான்கை கற்புறு மடவார் கண்டம்
இருசிறைக் கொக்கின் கண்ட மெனக்கடை கிடந்த மூன்றும்
அரியன..........

இதில் சிங்கத்தின் கைமட்டும் அதிகமாகக் கூறப்பட்டுள்ளது.

முத்தின் குணங்களும் குற்றங்களும்

முத்திற்கு குணங்கள் ஆறு என்றும் குற்றங்கள் நான்கு என்றும் கூறப்பட்டுள்ளன.

குணங்கள் வருமாறு:—1. உருட்சி 2. நட்சத்திரவொளி 3. திண்மை 4. மாசின்மை 5. பார்வைக்கின்புறல் 6. படிகம் போன்றிருத்தல். இவற்றிற்கு மேற்கோள்,

"உடுத்திர ளனைய காட்சி யுருட்சி மாசின்மை கையால்
எடுத்திடிற் றிண்மை பார்வைக் கின்புறல் புடிக மென்ன
அடுத்திடு குணமா றின்ன வணியின்மு தணங்கோ டின்மை
விடுத்திடுந் திருவந் தெய்துஞ் விளைந்திடுஞ் செல்வம் வாழ்நாள்."

குற்றங்களாவன:—1. காற்றேறு 2. மணலேறு 3. கல்லேறு 4. நீர் நிலை என்பன மிக்க குற்றங்கள்; பிறவும் குற்றங்கள் பலவுள வாயினும் கொள்க. இவற்றிற்கு மேற்கோள்,

"காற்றினு மண்ணினுங் கல்லினு நீரினுந்
தோற்றிய குற்றந் துகளறத் துணிந்தவுஞ்
சந்திர குருவே யங்கா ரகனென
வந்த நீர்மைய வட்டத் தொகுதியும்"
(சிலப். ஊர்காண்.)

இதில் சந்திரகுரு-வெண்முத்து, அங்காரகன்-செந்நீர்முத்து, வட்டத்தொகுதி-ஆணிமுத்து.

முத்தின் நிறம்

சலத்தில் கிடைக்கும் சங்கின் முத்தம், இப்பியின் முத்தம் வெண்ணிற மெனவும், மேகத்தின் முத்தம் செந்நிற மெனவும், மூங்கிலின் முத்தம் கல்மழையின் நிறமெனவும், பாம்பின் முத்தம் நீலமணி நிறமெனவும், பன்றிக் கொம்பின் முத்தம் உதிர நிற மெனவும், வெண்ணெல்லின் முத்தம் பசுமை நிறமெனவும், மீனின் முத்தம் பாதிரி மலரின் நிறமெனவும், யானைக் கொம்பு, கரும்பு இவைகளின் முத்தங்கள் பொன்னிற மெனவும் கூறுவர். இதனைக் கீழ்க் காண்க.

"மாடவெண் புறவின் முட்டை வடிவெனத் திரண்ட பேழ்வாய்
கோடுகான் முத்தம் வெள்ளை நிறத்தன கொண்மூ முத்தம்
நீடுசெம் பரிதி யன்ன நிறத்தது கிளைமுத் தாலிப்
பீடுசா னிறத்த ராவின் பெருமுத்த நீலத் தாமால்.

ஏனமா வாரஞ் சோரி யீர்ஞ்சுவைச் சாலி முத்தம்
ஆனது பசுமைத் தாகும் பாதிரி யனைய தாகும்
மீனது தரளம் வேழ மிரண்டினும் விளையு முத்தந்
தானது பொன்னின் சோதி தெய்வதஞ் சாற்றக் கேண்மின்."

(திருவிளை-புரா.)

முத்து கிடைக்கு மிடங்கள்

தற்காலம் சிங்களம், பாரசீகம், தலைமன்னார், தூத்துக்குடி, அமெரிக்காவில் உள்ள சில உஷ்ண கடற்கரை பிரதேசங்களில் சிறந்த முத்தெடுக்கின்றனர். பண்டை நாளிலும் மேலே குறிப்பிடப்பட்ட இடங்களில் முத்தெடுத்ததாகத் தெரிகின்றது. இதற்கு உதாரணம்,

"..................உற்பவிக்கும் தேசங்கள் சொல்லக் கேளாய்
தெரிசலாய் சிங்கள தேசத்திற் றனும் செப்பரிய
பாரசீக தேசந் தானே.
தேசமா தாம்பிரபரணி முகத் வாரம் செப்பரிய
கடலில் சவுராஷ்ட்ர தேசம்
ஏசயிமோ ரபர்வதத்திற் கருகான வாவியிசைந் திட்ட
நதியள கவுபர தேசங்கள்
பாசபாண் டியகாடில் விடத்தில் பாங்கான முத்ததுவு
முற்ப விக்குந் தானே."

(போகர் 7000.)

தலை மன்னாரில் தற்காலம் முத்தெடுக்கத் தோணிகளைச் சேக ரித்து 60 முதல் 90 அடிகள் ஆழமுள்ள சமுத்திரக் கரை யிடங் களில் நிறுத்தி ஒரு கயிற்றில் பாரத்திற்காக கல்லைக் கட்டி அதனுடன்

முத்துக் சேகரிப்பதற்காக உள்ள முழுக்காளியையும் தரை மட்டத்திற்கு அனுப்ப, அவன் முத்துச் சிப்பிகளைச் சேகரித்த பிறகு தோணியி லிருப்பவனுக்கு குறிப்பறிவிக்க மேலுள்ளவன் கயிற்றை மேலே யிழுக்க மூழ்கினவன் சிப்பிகளுடன் நீர் மட்டத்திற்கு வந்து சிப்பிகளுடன் தோணியில் சேர்கின்றான். பிறகு சிப்பிகளை, கரை சேர்த்து, அழுகவைத்து, பிளந்து, கடல் நீர் உள்ள பாண்டங்களி லிட்டு ஜாக்கிரதையாக சிப்பிகளில் உள்ள முத்துக்களைப் பொறுக்கி எடுத்த பிறகு, ஓடுகளையும் சுத்தித்துச் சேர்க்கின்றனர்.

நீரில் மூழ்குகின்றவர்கள் மேல்வரும் காலத்து, சிலர் இரத்தம் கக்குதலும், சிலர் மூர்ச்சையாதலும், சிலர் இரண்டையும் அடைதலும் உண்டு. அவர்கட்கு உடனே சாராயம் முதலிய போதை உண்டு பண்ணக்கூடிய பொருள்களைக் கொடுத்தல் பழக்கத்தில் இருக்கின்றது.

நிற்க, கிடைக்கும் முத்துக்கள் கடுகளவிலிருந்து நாவல் கொட்டை பருமன் இருக்கும். முத்தின் பருமன் அதிகமாக ஆக விலையும் அதிகரிக்கின்றது. பண்டை நாள் முதல் முத்தை நகையாக அணிந்து வருகின்றனர். முத்தை அணிந்தால் தீங்குகள் அணுகா திருக்கும் என்ற மூட நம்பிக்கையினால் பண்டை நாளில் மக்கள் ஆபரணமாக்கி அணிந்ததாகவும் கூறுவர் ஒரு சாரார். மற்றைய மணிகளைக் காட்டிலும் முத்துக்கு விலை மதிப் பதிகம் என்பதனைக் கீழ் வராநின்ற வரலாறுகளால் உணரலாம்,

ஜூலியஸ் ஸீசர், மார்க்கஸ் புரூட்டஸ் தாய் சர்வில்லாவுக்கு 4800 பவுண்ட் விலையுள்ள முத்தை இனமளித்ததாகவும், கிளியோபாட்ரா 80000 பவுண்ட் மதிப்புள்ள முத்தை விழுங்கியதாகவும், பர்ஷியா தேசத்து ஷாவுக்கு தேசாந்திரி டேவர்னீர் 180000 பவுண்டக்கு ஒரு முத்தை விற்றதாகவும், மாஸ்கோவிலுள்ள "பில்கிரின்" முத்து 24 காரட் என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

மற்றும் ஜப்பானியர் நீர் நிலைகளை எற்படுத்தி அதில் சிப்பிகள் வாயைச் சாக்கிரதையாக பிளந்து உள்ளிருக்கும் சதையின் மேல் மூடியிருக்கும் ஜவ்வை கால் சதுர அங்குலத்திற்கு மூன்று பக்கம் கத்தரித்துப் புரட்டி அவ்விடத்தில் சிறிய கண்ணாடிமணி அல்லது மணல் பருக்கை ஒன்றை வைத்து மேற்படி புரட்டிவைத்த ஜவ்வால் மூடி தையலிட்டு வாயைமூடி நீரில் விட்டு விடுகின்றனர். மணலைச் சுற்றிலும் சிப்பிச் சதையிலிருந்து வடியும் பசைபோன்ற திரவம் மூடி ஒரு ஆண்டில் சிறந்த முத்தாகின்றது. இம்மாதிரி செயற்கையில் முத்து உண்டு பண்ணுவதில் நிபுணர்களாக ஜப்பானியர் கருதப் படுகின்றனர்.

முத்தை செயற்கையாகவும் நம் முன்னோர்கள் செய்து வந்த தாக அறியக் கிடக்கின்றது. அம்முறைகள் பழக்கத்தில் இன்மை யால் சுருங்கக் கூறுதும்.

தள்ளப்பட்ட முத்துக்களேயும், சிப்பிகளேயும், பூநீர் கற்சுண் ணும்பு கலப்பிலிட்டு கொதிக்கவைத்து நீர் சுண்டிய பிறகு கழுவி யுலர்த்தி தூளாக்கி முத்திருக்கஞ் செவிச் (நிலக் கடம்பு) சாற்றினல் நான்கு நாள் நன்றுயரைத்து பிறகு சூரியகாந்தி இலேயினல் செய்த மூசையிலிட்டு உளுந்துமாவால் கவசம் செய்து ஏழுநாள் வெய்யி லில் உலர்த்தி எட்டாம் நாள் பிரித்தெடுக்க இயற்கை முத்துப்போன்ற ஒளியுடன் கூடிய சிறு முத்துக்களேக் காணலாம். இதனே போகர் நூலில் விரிவாகக் காண்க.

முத்தின் சோதனே

முத்துத் தொகுதியிலிருந்து எடுத்த ஒரு முத்தைச் சாராயத்தி லிட கரைந்து விட்டால் நன்முத்தாகும் என்று கூறுவர்.

கல்லுப்பும் நவாச்சாரமும் சமவெடை கலந்தரைத்து பசு மூத்திரத்தில் கலந்துபாத்திரத்திலிட்டு அதில்முத்தை ஒரு நாழிகை வரைவைத் தெடுத்து சம்பாநெல் உமியிலிட்டு தேய்த்துப் பார்க்கும் பொழுது போட்டவாறே இருந்தால் பிறந்த முத்தென்றும், வேறு நிறத்தைக் காட்டுமாயின் வைப்பு முத்தென்றும் கண்டு கொள்க. இஃதே வட நூலாரின் கொள்கையும்.

முத்தின் சுவையாதி தன்மைகள்

இது கைப்பு, சிறிது இனிப்புச் சுவைகளேயும், சீத வீரியத்தை யும், இனிப்புப் பிரிவையும் உடைத்து. இதற்கு காமப் பெருக்கிச் செய்கையும், கப நாசனிச் செய்கையும், விட நாசனிச் செய்கையும், இசிவகற்றிச் செய்கையும், பலகாரிச் செய்கையும், குருதிப் பெருக்கை அடக்கும் செய்கையும் உள என்பர்.

முத்தின் குணம் (பொது)

அத்திசுரம் சோபை யருசிதுர்ப் பலம்கண்ணேய்
பித்தவிடஞ் சீதளநோய் பேசுகபம்—சுத்தத்
தயிரியநட் டத்தோடு தாதுநட் டமும்போம்
உயிருறு நன்முத் திருந்தா லோது.

(பொ-ள்) எலும்பைப்பற்றிய சுரம், சோபை, சுவையின்மை, உடல்வன்மை குறைவு, கண்ணேப் பற்றிய நோய்கள், பித்த விருத்தி, விடங்கள், சீதள நோய்கள், கபவிருத்தி, மனவலிமையின்மை, இந்திரிய நட்டம் இவைகள் நல்ல முத்தினல் நீங்கு மென்ப.

முத்தின் சுத்தி முறைகள்

ஒரு பலம் முத்திற்குப் புளித்த பசுவின் தயிர் மூன்று பலம் விட்டு சூரிய புடம் வைக்கவேண்டும். இவ்விதம் மூன்று நாள் பிரதி தினமும் பசுவின் தயிர் மூன்று, மூன்று பலம் வீதம் விட்டு சூரிய புடம் வைத்து அதன் பின்பு மேற்படி முத்திற்கு தயிர் விடாமல் இரண்டு நாள் காயவைத்து உலர்த்த வேண்டும். இவ்விதம் மீண்டும் இருமுறை செய்து முடிவாயுலர்ந்த பின் நன்றாய் உலர்த்தி கழுவி யெடுத்துக் கொள்வதே முத்திற்கு சுத்தியாம்.

(தே. ய. வெ.)

வேறு

முத்தை ஊமத்தங்காய் ரசத்தில் ஒரு நாள் ஊறவைத்து மறுநாள் சுத்த நீரில் கழுவி, பின் புளியிலைச் சாற்றில் ஒருநாள் ஊறவைத்து மறுநாள் அதைச் சுத்த நீரில் கழுவி ரவியில் உலர்த்தி எடுத்துக் கொள்ளவும்.

(வை. ரா. சி.)

வேறு

முத்தை எலுமிச்சம்பழச் சாற்றிலும், காடியிலும் ஒருநாள் ஊறவைத் தெடுத்து நீர்விட்டு கழுவி எடுக்கச் சுத்தியாம்.

வேறு

சங்கம் பழச்சாறு அல்லது பொன்னும் பழச்சாறு அல்லது புளிக் குழம்பு இவைகளில் யாதானுமொன்றில் இரண்டு நாள் ஊறவைத் தெடுக்கச் சுத்தியாம்.

Printed at the Rudisill Press, No. 7, Nallanna Mudaly Street, Royapettah and Published by C. M. Rajajagadeesan.
Sidha Students' Association G.S.I.M. Kilpauk, Madras.